14.02.2025 அ.வ. எண். 223/2019 வா.சா.1 லட்சுமிபதி

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் டிப்ளமோ மெக்கானிக்கல் படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன், வட்டி தொழிலும் செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி 2011 ஆம் ஆண்டிற்கு முன்பு என்னிடம் வாடகைக்கு இருந்தார். 1ம் பிரதிவாதிக்கு கடனுறுதி சீட்டின் அடிப்படையில் கடன் கொடுத்தேன். கடனை கொடுத்துவிட்டு கடனுறுதி சீட்டு எழுதி வாங்கினேன். வட்டி தொழில் 20 ஆண்டுகள் செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி வழக்கு கடன் தான் முதல்முதலாக வாங்கியதாகும். 1ம் பிரதிவாதி கடன் வாங்கியபோது அவருடைய மனைவியும், ராஜ்குமாரும் இருந்தார்கள். நகையை வங்கியில் அடமானம் வைத்துள்ளதாகவும் அதை மீட்பதற்கு பணம் வேண்டுமென்று கடன் வாங்கினார். 3,4 பிரதிவாதிகள் சொந்த செலவிற்காகவும், படிப்பு செலவிற்காகவும் 1ம் பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் கல்வி செலவிற்காக 1ம் பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றும் அதனால் 1ம் பிரதிவாதி வாங்கிய கடன் 3,4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் கடனுறுதி சீட்டை எழுதினார். 1ம் பிரதிவாதி எழுதிய கடனுறுதி சீட்டு கையில் தான் எழுதினார். 1ம் பிரதிவாதி அவருடைய சொந்த செலவிற்காக தான் கடன் வாங்கினார் என்றும் 1ம் பிரதிவாதி வாங்கிய கடன் 3,4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் வழக்கு 3,4 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.